DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெள்ளிகிழமை 25ம் நாள் சாட்சியாகிய ஜெயக்குமார் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr-III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயக்குமார் | வயது | 32 |
| த/பெ. | கன்னியப்பன் | இனம் | ஆண் |
| கிராமம் | | தொழில் | அரக்கோணம் மதுவிலக்கு பிரிவு முதல் நிலை காவலர் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C. 97/2021**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

**<u>முதல் விசாரணை 25.11.2024 அ.சா.1</u>**

1. நான் தற்போது அரக்கோணம் மதுவிலக்கு பிரிவில் முதல் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். நான் 2020ம் வருடம் அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் காவலராக பணியாற்றினேன். 22.11.2020 ம் தேதி மாலை 05.00 மணிக்கு அரக்கோணம் புதிய பேருந்து நிலையம் சோதனை சாவடியில் நான் பணியில் இருந்தபோது, ஒரு நபர் பேருந்து நிலையத்தில் ஒரு மாதிரியாக பேசிக்கொண்டிருப்பதாகவும், 4, 5 நபர்கள் நின்றுக்கொண்டிருப்பதாக தகவல் வந்தது.

2. நான் சென்று அந்த நபரிடம் அந்த இடத்தில் ஒரு வாரத்திற்கு முன்பு கொலை நடந்ததாகவும், இங்கு நிற்க கூடாது என்று தெரிவித்தேன். அதற்கு அந்த நபர் ங்கோத்தா, நீ யாறுடா கேட்பதற்கு என்றும், அவர் தான் நாங்கள் பெரிய ஆளு என்று என்னை பார்த்து சொன்னார்.

3. நான் ரோந்து பணியில் இருந்த காவலர்கள் சத்தியமூர்த்தி, தங்கராஜ் ஆகியோர்களுக்கு தகவல் கொடுத்தேன். அவர்கள் வந்தவுடன் அவர்களிடமும் அந்த நபர் ஒரு மாதிரியாக பேசினார். அந்த நபரை சத்தியமூர்த்தியின் இருசக்கர வாகனத்தில் காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து சென்றபோது அசிங்கமாக பேசிக்கொண்டு இருசக்கர வாகனத்தை ஆட்டினார். அதனால் இருசக்கர வாகனத்தில் சென்ற சத்தியமூர்த்தி, தங்கராஜ், அந்த நபர் கீழே விழுந்துவிட்டார்கள். பிறகு அந்த

நபரை சத்தியமூர்த்தி, தங்கராஜ் காவல் நிலையம் அழைத்து சென்றார்கள். அந்த நபரின் பெயர் ஸ்டிபன், மூதூரை சேர்ந்தவர். நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள கருப்பு நிற பனியன் அணிந்த நபர்தான் ஸ்டிபன். **(சாட்சி சரியாக எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்)**.

4. நான் அன்றைய தினமே அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது நான் கொடுத்த புகார். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

5. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.